# 11

# ஒரு அறிமுகம் (2 பேதுரு)

1 மற்றும் 2 பேதுரு நிருபங்கள் எழுதப்படுவதற்கு இடையில் எவ்வளவு காலம் கடந்து சென்றிருந்தது என்பது நிச்சயமற்றதாக உள்ளது. மிகவும் குறிப்பிடத்தக்க தகவல்கள் குறைவாக உள்ள காரணத்தால், பேதுரு இன்னமும் ரோமாபுரியிலேயே இருந்தார் என்று நாம் யூகிக்கிறோம். இது தமது இரண்டாவது நிருபம் என்று பேதுரு தமது வாசகர்களுக்குக் கூறியதால் (3:1), அவர் தமது முதல் நிருபத்தை எந்தக் கிறிஸ்தவர்களுக்கு எழுதினாரோ, அதே கிறிஸ்தவர்களுக்கே இந்த இரண்டாம் நிருபத்தையும் எழுதினார் என்று நாம் யூகிக்கிறோம். ஆசியா மைனர் பகுதியில் இருந்த சபைக் குழுமங்களில் புதிய பிரச்சனைகள் எழுந்திருந்ததாலும் அவற்றைக் குறித்துப் பேதுருவுக்கு தகவல் அளிக்கப்பட்டிருந்ததாலும், இவ்விரு நிருபங்களுக்கு இடையில் போதிய அளவு கால இடைவெளி கடந்து இருந்தது எனலாம். இரண்டாம் நிருபத்தின் அக்கறைக்குரிய விஷயங்கள், முதல் நிருபத்தின் அக்கறைக்குரிய விஷயங்களில் இருந்து கணிசமாக வேறுபடுகின்றன. இந்த நிருபத்தின் அக்கறைக்குரிய விஷயங்களையும் அவற்றைப் பேதுரு எழுதியது ஏன் என்பதையும் காண்பதற்கு முன்னால், இதை எழுதியவரைப் பற்றி நாம் சற்றே கவனம் செலுத்துவோம்.

## எழுதியவர்

புதிய ஏற்பாட்டில் ஒரு சில புத்தகங்களே, 2 பேதுரு நிருபம் கொண்டுள்ளது போன்று, அதன் அதிகாரத்துவம் பற்றி அதிகமான வலிமையைக் கொண்டு அறைகூவல் விடுப்பவைகளாக உள்ளன. “அதிகாரத்துவம்” என்பது உண்மையிலேயே ஒரு புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நபரே அந்தப் புத்தகத்தை எழுதினாரா இல்லையா என்பது பற்றிய பிரச்சனையாகும். இவ்விடத்தில் நாம், கேள்விகளைப் பரிசோதிக்காவிட்டாலும், டின்டேல் புதிய ஏற்பாட்டு விளக்கவுரைகளில் இருந்து ஆலோசனைகளைப் பெற நீங்கள் விரும்பலாம்.[1] இந்த நிருபம் இதன் எழுத்தாளரை “சீமோன் பேதுரு” என்று அடையாளப்படுத்தித் தொடங்குகிறது என்ற உண்மை (1:1) நம்மில் பலருக்குப் போதுமானதாக உள்ளது. இது பேதுருவினால் எழுதப்பட்டது என்று கூறுகிறதென்றால், இது பேதுருவினாலேயே எழுதப்பட்டதாக இருந்தது.

## எழுதியதற்கான சந்தர்ப்பம்

பேதுருவின் இரண்டாம் நிருபத்தை, முதல் நிருபத்துடன் நாம் ஒப்பிடும்போது, கருத்து நோக்கில் ஒரு தெளிவான மாற்றத்தைக் கவனிக்கிறோம். முதல் நிருபம், புறம்பான உலகத்தில் இருந்து சபைக்குத் தரப்பட்ட அழுத்தங்களைக் குறிப்பிட்டது; இரண்டாவது நிருபம் சபைக்கு உள்ளாகவே இருக்கும் பிரச்சனைகள் மீது கவனம் குவித்தது. இரண்டாவது நிருபம்

பாடுகளைப் பற்றி அரிதாகவே குறிப்பிட்டது.

இரு நிருபங்களும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர் நோக்கியிருக்கையில், இவற்றின் அணுகுமுறை மாறுபட்டதாக இருந்தது. முதலாம் நிருபத்தில் பேதுருவும் அவரது வாசகர்களும், கர்த்தரின் உடனடி வருகையை எதிர்நோக்கினர். பேதுரு தமது இரண்டாம் நிருபத்தில், கிறிஸ்து ஏன் மறுபடி வந்திருக்கவில்லை என்பதைப் புரிந்துகொள்ளப் போராடிக்கொண்டிருந்த கிறிஸ்தவர்களுக்கு உற்சாகம் அளித்தார். 1 மற்றும் 2 பேதுரு நிருபங்கள் எழுதப்பட்ட காலக்கட்டங்களுக்கு இடையில் நடந்த மேம்பாடுகளை நாம் ஆழ்ந்து சிந்தித்தால், இவ்விரு நிருபங்களுக்கு இடையில் உள்ள வேறுபாடுகள், புரிந்துகொள்ள சுலபமானவைகளாக இருக்கும்.

“அறிவு” என்பது 2 பேதுரு நிருபத்தின் திறவுகோல் வார்த்தையாக உள்ளது. கிறிஸ்தவர் ஒருவர், கர்த்தருக்கு விசுவாசமாக நிலைத்திருக்க வேண்டுமென்றால், அவர் குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் பொய்யிலிருந்து சத்தியத்தைப் பிரித்துணரக்கூடியவராக இருக்க வேண்டும். “அறிய,” “அறிந்த,” “அறிகிற” மற்றும் “அறிவு” என்பவை KJV வேதாகமத்தில் இந்தச் சிறிய நிருபத்தில் பதினான்கு முறைகள் உள்ளன. 1ம் அதிகாரத்தில் மாத்திரம் எட்டு முறைகள் உள்ளன. ஆறு மாறுபட்ட கிரேக்க வார்த்தைகள் இவற்றிற்குப் பின்னால் உள்ளன. நேரெதிர் ஒப்பீட்டின் மூலம், “அறிதல்” மற்றும் “அறிவு” என்ற வார்த்தையில் வடிவங்கள் 1 பேதுரு நிருபத்தில் இருமுறை மாத்திரம் உள்ளன. பேதுரு தமது 2வது பேதுரு நிருபத்தை எழுதுகையில், தமது வாசகர்கள் அறிந்திருந்தது என்ன என்பதைப் பற்றியே மிகவும் அக்கறை கொண்டிருந்தார்.

சபைகளில் ஊடுருவி இருந்த கள்ளப்போதகர்கள், அறிவைக் குறித்த இடர்ப்பாட்டிற்குக் காரணமாக இருந்தனர். வாசகர்கள் தாங்கள் கேள்விப்பட்டிருந்த மூலச் செய்தியை நினைவூட்டுதல் என்பதே 2 பேதுரு நிருபத்தின் நோக்கமாக இருந்தது. பேதுரு தம்மைக் கள்ளப்போதகர்களுடன் நேரெதிராக ஒப்பிட்டு, அந்தப் போதகர்களை அவர்களின் தேவபக்தி இல்லாமைக்காகத் தேவன் நியாயந்தீர்ப்பார் என்று தமது வாசகர்களுக்கு உறுதி அளித்தார். நேரெதிர்க் கருத்திற்கான உறுதிப்பாடுகள் இருந்தபோதிலும், கிறிஸ்து திரும்பவும் வருவார் என்று தமது வாசகர்கள் அறிய வேண்டும் என்று பேதுரு விரும்பினார். அவர் [கிறிஸ்து] அவ்வாறு வரும்போது, பூமியும் அதின் கிரியைகள் யாவும் அழிக்கப்படும் மற்றும் எல்லா மக்களும் நியாயந்தீர்க்கப்படுவார்கள். இதுவே 2 பேதுரு நிருபத்தின் செய்தியாகவும் பேதுரு இதை எழுதுவதற்கான காரணமாகவும் இருந்தது.

(குறிப்பு: 2 பேதுரு நிருபத்தின் வரைகுறிப்பு இப்புத்தகத்தின் அடுத்த பக்கத்தில் உள்ளது.)

---

குறிப்பு

[1]Michael Green, *The Second Epistle General of Peter and the General Epistle of Jude.* The Tyndale New Testament Commentaries, ed. R. V. G. Tasker (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1968).

# *2 பேதுரு நிருபத்தின் வரைகுறிப்பு*

***வாழ்த்துதல்:*** *பேதுரு தாம் கொண்டுள்ளது போன்று விலையேறப் பெற்ற விசுவாசம் கொண்டவர்களுக்கு வாழ்த்துதல் தெரிவித்தல் (1:1, 2).*

I. ***இதைச் செய்யுங்கள் அப்போது நீங்கள் ஒருக்காலும் இடறிவிழ மாட்டீர்கள் (1:3-21).***
   A. *திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகுதல் (1:3-7).*
   B. *உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் (1:8-15).*
   C. *கர்த்தருடைய வல்லமை மற்றும் வருகை பற்றிய உங்கள் அறிவில் நம்பிக்கையாயிருங்கள் (1:16-21).*

II. ***கள்ளப்போதகர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் (2:1-22).***
   A. *கள்ளப்போதகர்கள் சத்தியத்தின் வழியை தூஷிக்கின்றனர் (2:1-9).*
   B. *கள்ளப்போதகர்கள் துணிகரமுள்ளவர்களாக சுய விருப்பம் கொண்டவர்களாக இருக்கின்றனர் (2:10-16).*
   C. *கள்ளப் போதகர்கள் கேட்டிற்கு அடிமைகளாக இருக்கின்றனர் (2:17-22).*

III. ***கர்த்தருடைய வருகை பற்றிய வாக்குத்தத்தத்தை நினைவில் வைத்திருங்கள் (3:1-18).***
   A. *ஏளனம் செய்பவர்கள் வேண்டுமென்றே மறந்துவிடுகின்றனர் (3:1-7).*
   B. *கர்த்தர் பொறுமையுள்ளவராயிருக்கிறார் (3:8-10).*
   C. *நீங்கள் எவ்வகைப்பட்ட மக்களாக இருக்க வேண்டும்? (3:11-18).*